20 FEB 2000
மாநகராட்சி மன்றம் யாழ்ப்பாணம்
நல்லூர் பிரதேச நூலகம்

பக்கங்கள் ஆறு

# வலம்புரி

விலை ரூபா 5-00

சங்கு: 1 வள்ளுவர் ஆண்டு 2031 மாசி 07 சனிக்கிழமை (19 - 02 - 2000) VALAMPURI ஒலி: 62

## எழுதுமட்டுவாளில் வீழ்ந்த ஹெலி தாமே சுட்டதாக புலிகள் அறிவிப்பு!

(கொழும்பு)

நேற்று முன்தினம் எழுதுமட்டுவாளை அண்டிய பகுதியில் வீழ்ந்து நொருங்கிய ஹெலிகெப்டரைத்தாமேசுட்டு வீழ்த்தியதாக விடுதலைப்புலிகள் நேற்று உத்தியோக பூர்வமாக அறிவித்துள்ளனர்,

இதனை விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ செய்தி அமைப்பான புலிகளின் குரல் ஊர்ஜிதப்படுத்தியது.

ஊமையாள்புரத்தில் இடம்பெற்றுவரும் மோதல்களில் காயம்டையும் படையினரை ஏற்றி இறக்கும் பணியில் ஈடுபட்ட எம். 212 ரக ஹெலிகொப்டரே விடுதலைப்புலிகளின் விசேட விமான எதிர்ப்பு அணியினரால் வெற்றிகரமாகச் சுட்டு வீழ்த்தப்பட்டது.

இச் சம்பவத்தில் ஹெலிகொப்டரின் உதவி விமான ஓட்டி சிவலி முனசிங்கவும் துப்பாக்கி சுடும் வீரர் பண்டார என்புவரும் கொல்லப்

(6 ஆம் பக்கம் பாக்க)

## உமையாள்புரத்தில் ஏற்பட்ட மோதலில் புலிகள் தரப்பில் உயிரிழந்தோர்

(வவுனியா)

கடந்த 16 ஆம் திகதி உமையாள்புரத்தில் விடுதலைப் புலிகள் மேற்கொண்ட திடீர் அதிரடித் தாக்குதலில் தமது தரப்பில் 21 போராளிகள் உயிரிழந்துள்ளனர் என விடுதலைப் புலிகள் அறிவித்துள்ளனர் அவர்களின் பெயர் விபரம் வருமாறு;

★ மேஜர் செங்கன் (மாதங்கன் மனோகரன்) மட்டக்களப்பு

★ மேஜர் நக்கீரன் / சசி (நாகலிங்கம் தவச்செல்வன்) யாழ். மாவட்டம்,

லெப்டினன்ட்களான

★ சுகந்த செல்வன் (துரைச்சாமி கணேசலிங்கம்) மாங்குளம்.

★ பானு (செல்வராஜ் செல்வன்) யாழ். மாவட்டம்.

★ நீசன் (கணேசராசா சதீஸ்குமார்)

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ★ இலங்கையில் தற்போது காணப்படும் இனப்பிரச்சினை உள்ளூர்பிரச்சினையாகஇருப்பதால் வெளியார்தலையீடு அவசியமற்றது!

## சிங்களஇனவாத கட்சிகள் தெரிவிப்பு

— வலம்புரி கொழும்புச் செய்தியாளர் —

**இலங்கையில் தற்போது காணப்படும் இனப்பிரச்சினை உள்நாட்டு பிரச்சினையாக இருப்பதால் அப்பிரச்சினை தொடர்பாக சம்பந்தப்பட்டவர்களுடன் உள்நாட்டிலேயே பேச வேண்டும். அதற்கு வெளிநாடு ஒன்றினதோ பலவற்றினதோ தலையீடுகள் இருப்பது விரும்பத்தக்கதல்ல வென்று: சிங்கள பூமி புத்திரக் கட்சியின் தலைவர் பேராசிரியர் ஹரிச்சந்திர விஜயதுங்க தலைமையில் கொழும்பில் உள்ள நோர்வே தூதுவருக்கும், ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்காவுக்கும் மகஜர்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளன.**

இலங்கையில் நிலவும் இனப்பிரச்சினை ஓர் உள் நாட்டுப் பிரச்சினை இதில் வெளிநாடுகளின் தலையீடு தேவையற்ற ஒன்றாகும். இந்த வகையில் நோர்வே அரசு இலங்கையின் இனப்பிரச்சினை விடயத்தில் தலையிடுவது விரும்பத்தக்கதல்ல.

இவ்வாறு 15 அமைப்புக்களைக் கொண்ட சிங்கள இனவாத முன்னணிஇலங்கையிலுள்ள நோர்வே தூதுவராலயத்தில் சமர்ப்பித்த மகஜரில் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளது.

இந்த மகஜர் நேற்றுப் பிற்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## அமைச்சர்பதவிகளைநாம்துறக்கமாட்டோம் மத்யூ - சரத்அமுனுகம தெரிவிப்பு!

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி மாற்று அணியைச் சேர்ந்த எம். பிக்களான நந்தாமத்யூ கலாநிதி சரத் அமுனுகம ஆகியோர் தாம் அமைச்சர் பதவிகளைத் துறக்கப்போவதில்லை என தீர்மானித்துள்ளனர்.

கடந்த புதன்கிழமை நடைபெற்ற ஐ. தே. கட்சியின் செயற்குழுக் கூட்டத்தில் இவ்விருவரும் அமைச்சர் பதவி

(6 ஆம் பக்கம் பார்க்க)

## யுத்தத்தினால் பாதிப்புற்ற படை வீரருக்கு வீடமைப்புக் கடனாக 2 லட்சம் ரூபா

### வனிதா சேவா சங்கம் வழங்கியது

(கொழும்பு)

இனப்பிரச்சினை தொடர்பாக இடம்பெற்றுவரும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட படைவீரர்கள், அங்கவீனமுற்றோர், கொல்லப்பட்டோர் காணாமல்போனோர் ஆகியோரது குடும்பங்களைச் சேர்ந்த 40 பேருக்கு வனிதா சேவா இயக்கம் வீடமைப்பு கடன்களை வழங்கியுள்ளது.

வனிதா சேவா இயக்கத் தலைவி திருமதி ரமணிரத்வத்த தலைமையில் இடம்பெற்ற வீடமைப்பு கடன் வழங்கும் வைபவமொன்றில் பாதிப்புற்ற ஒவ்வொருவருக்கும் தலா 2லட்சம் ரூபா கடனாக வழங்கப்பட்டது.

(6 ஆம் பக்கம் பார்க்க)

## உண்ணாவிரதிகளின் பெற்றோர்கள் வன்னி சென்று கைதிகளை பார்க்க பாதுகாப்பு அமைச்சு அனுமதித்தது

(கொழும்பு)

வன்னியில் சாகும் வரை உண்ணாவிரதமிருக்கும் யுத்தக் கைதிகளை அவர்களின் உறவினர்கள் வன்னிக்குச் சென்று பார்வையிட பாதுகாப்பு அமைச்சு அனுமதி வழங்கியுள்ளது.

இது விடயமாக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சந்திரானந்த டி சில்வா சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்திடம் தெரிவித்துள்ளார். அரசாங்கம் எந்தவித நிபந்தனையுமின்றி கைதிகளின் பெற்றோரை வன்னிசெல்ல அனுமதித்துள்ளதாக தகவல் திணைக்களம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உண்ணாவிர தமிருக்கும் கைதிகளை பார்வையிட விடுதலைப்புலிகள் ஏற்கனவே அனுமதி வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை உண்ணாவிர தமிருக்கும் கைதிகளின் உறவினர்களில் யாரை அனுமதிப்பது என்பது தொடர்

(6 ஆம் பக்கம் பார்க்க)

## வன்னிக்குப் பயணிகள் செல்ல நேற்று அனுமதிக்கப்படவில்லை

(வவுனியா)

இராணுவக் கட்டுப்பாடில்லாத கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களிற்கு நேற்று வவுனியாவிலிருந்து பயணிகள் செல்ல அனுமதிக்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது.

வன்னி செல்வதற்கு கணிசமான பயணிகள் பதிவு செய்த போதும் வன்னியிலிருந்து சாதகமான பதில் கிடைக்காமையால் பயணிகளை

(6 ஆம் பக்கம் பார்க்க)

## கிரனேட்டுடன் மூவர் கைது

பாராளுமன்றத்திற்கு அண்மையில் பத்தர முல்ல என்னும் இடத்தில் ஆட்டோவில் வந்த மூவரைப் பொலிஸார் கைது செய்ததுடன் அவர்களிடம் 3 கிரனேட்டுகளும் ஒரு துப்பாக்கியும் கைப்பற்றப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

இம் மூவர் கொண்ட. குழுவினர் பாதாளஉலகக் கோஷ்டியைச் சேர்ந்தவர்கள் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர். (வ)

## யாழ். விவசாயப் பொருட்களுக்கு கப்பல் மூலமாக சந்தை வாய்ப்பு

(கொழும்பு)

யாழ்ப்பாணக் குடாநாட்டு விவசாயிகள் தமது விவசாய உற்பத்திப்பொருட்களை சந்தைப் படுத்துவதற்கு வாய்ப்பை அளிக்கும் விதத்தில் கப்பல் சேவை ஒன்றை நடத்த அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது என்று உள்நாட்டு வெளிநாட்டு வர்த்தக உணவுத் துறை அமைச்சர் கிங்ஸ்லி விக்கிரமரத்தின பாராளுமன்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# விளையாட்டுச் செய்தி

## யாழ். பிரதேச செயலர் பிரிவில் நடைபெற்ற விளையாட்டுப் போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

வடக்கு -கிழக்கு மாகாணக்கல்வி பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் பணிப்பின் பிரகாரம், யாழ். பிரதேச செயலர் பிரிவினால் நடாத்தப்பட்ட 2000ஆண்டுக்கான வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், உதைபந்தாட்டம், எல்லே போட்டி, கபடி போட்டி, மென்பந்து கிரிக்கெட் போட்டி ஆகிய குழு நிலை போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

கடந்தமாதம் 16ஆம்திகதி தொடக்கம்இம்மாதம்10ஆம் திகதிவரை யாழ்.துரையப்பா விளையாட்டு மைதானத்தில் நடைபெற்ற இப் போட்டி முடிவுகள்வருமாறு.

**கரப்பந்தாட்டம் - ஆண்கள்**

1ம் இடம்- குருநகர் விளையாட்டுக் கழகம், 2ம் இடம்- குருநகர் சென். றொக்ஸ் விளையாட்டுக் கழகம்.

**கரப்பந்தாட்டம் -பெண்கள்**

1ம் இடம்- குருநகர் யுத்கார்மல் விளையாட்டுக் கழகம். 2ம் இடம்- யாழ். பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம்.

**உதைபந்தாட்டம்**

1ம் இடம்- குருநகர் விளையாட்டுக் கழகம், 2ம் இடம்- குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம்.

**மென்பந்து கிரிக்கெட்**

1ம் இடம்- யாழ். கிறீன் பீல்ட் விளையாட்டுக் கழகம், 2ம் இடம்- குருநகர் பாடுமீன் விளையாட்டுக் கழகம்.

**எல்லே போட்டி- ஆண்கள்**

1ம் இடம்- குருநகர் சென். றொக்ஸ் விளையாட்டுக் கழகம், 2ம் இடம்- திருநகர் பாரதி விளையாட்டுக் கழகம்.

**எல்லே போட்டி-பெண்கள்**

1ம் இடம்- குருநகர் விளையாட்டுக் கழகம், 2ம் இடம்- குருநகர் யுத்கார்மல் விளையாட்டுக் கழகம்.

**கபடி போட்டி - ஆண்கள்**

1ம் இடம்- குருநகர் விளையாட்டுக் கழகம், 2ம் இடம்- குருநகர் பாரதி விளையாட்டுக் கழகம்.

**கபடி போட்டி - பெண்கள்**

1ம் இடம்- குருநகர் யுத்காமல் விளையாட்டுக் கழகம், 2ம் இடம்- யாழ். பமிலியன்ஸ் விளையாட்டுக் கழகம். (க-9)

### கபடி விளையாட்டு

(பருத்தித்துறை)

பருத்தித்துறை பிரதேச செயலக விளையாட்டுக் கழகங்களுக்கு இடையிலான ஆண்களுக்கான பாரம்பரிய 'கபடி' விளையாட்டுப் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப. 2.30 மணியளவில் பருத்தித்துறை கடற்கரை மைதானத்தில் இடம் பெறவுள்ளது.

மலாயன் சாண்டோ விளையாட்டுக் கழகத்தினரின் அனுசரணையுடன் இடம்பெறும் இப்போட்டியில், சென்தோமஸ் விளையாட்டுக் கழகம், இராஜாளி தற்காப்பு பல்கலை விளையாட்டுக் கழகம், துள்ளுமீன் விளையாட்டுக்கழகம், பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் ஆகிய, அணிகள் போட்டியிடவுள்ளன. (க-11)

### உதைபந்தாட்ட போட்டிகள்

(பருத்தித்துறை)

அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழகம் நடாத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் அரை இறுதியாட்டம் இன்றும், நாளையும் அல்வாய் நண்பர்கள் விளையாட்டுக் கழக மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இவ் அரை இறுதியாட்டங்களில் இன்று சனிக்கிழமை பொமேஸ் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து டைமன்ஸ் விளையாட்டுக் கழக அணியும்,

நாளை ஞாயிற்றுக்கிழமை கருணாகரன் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சிவானந்தா விளையாட்டுக் கழக அணியும் மோதவுள்ளது. (க-11)

### எல்லே விளையாட்டு போட்டி

(மானிப்பாய்)

சண்டிலிப்பாய் பிரதேச செயலர்பிரிவிலுள்ள விளையாட்டுக்கழகங்களுக்கிடையே இடம் பெற்ற எல்லே விளையாட்டுப் போட்டியில் பண்டத்தரிப்பு ஐக்கிய விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தையும் நவாலி முருகானந்தா விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுக் கொண்டன.

இப் போட்டி கடந்த 13ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பண்டத்தரிப்பு கல்லூரியில் இடம் பெற்றது.

போட்டிகளை சண்டிலிப்பாய் பிரிவுவிளையாட்டு உத்தியோகத்தர் அ.ம. மோகனதாஸ் முன்நின்று நடாத்தினார். (க)

### சில்வஸ்ரார் அணிவெற்றி

(வட்டுக்கோட்டை)

வலி. மேற்கு சங்கானை பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட விளையாட்டுக் கழகங்களுக்கிடையிலானவருடாந்த உதைபந்தாட்டப் போட்டி அராலி மாவத்தை விளையாட்டுக்கழக மைதானத்தில்கடந்த புதன்கிழமை பி.ப3மணியளவில் இடம் பெற்றது.

இறுதி ஆட்டங்களுக்குத் தெரிவு செய்யப்பட்டஅராலி வடக்குசில்வஸ்ரார் அணியை எதிர்த்து அராலி கிழக்கு அண்ணா விளையாட்டுக்கழகம் மோதியது.

குறிக்கப்பட்ட நேரத்தில் 1:1என்ற கோல்கணக்கில் சமநிலையில் இருந்ததையடுத்து மேலதிகநேரம்கொடுக்கப்பட்டபோதிலும் எதுவித கோல்களையும் அடிக்காத இரு அணியினரும் 'பனால்ட்டி,முறையில் சில்வஸ்ரார் அணி 2:0என்றரீதியில் வெற்றியீட்டியது. (க-24)

### இல்ல மெய்வல்லுநர் போட்டி

யாழ்.வடமராட்சி மத்திய மகளிர் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.00 மணிக்கு கல்லூரி அதிபரின் தலைமையில் நடைபெறவுள்ளது.

★ ★ ★

யாழ்.இமையாணன் அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 20 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப.2.00 மணிக்கு பாடசாலை அதிபர் திருமதி ந. சந்திரசேகரம் அவர்களின் தலைமையில் நடைபெறவுள்ளது.

# வடக்கு-கிழக்கு மாகாண நூலகருக்கு குறுங்கால பாடநெறி அறிமுகம்

(புலோலி)

வடக்கு—கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சித்திணைக்களம் தேசிய நூலக ஆவணவாக்கல்சேவைகள் சபையின் அனுசரணையுடன் வடக்கு—கிழக்குமாகாணத்தில் உள்ள நூலகர்களுக்கு குறுங்கால பாடநெறிகளை வழங்கவுள்ளது.

மாகாணமட்டத்தில் பாடசாலை நூலகர்களுக்கான பாடநெறி பொது நூலகர்களுக்கானபாட நெறிபிரிவேன நூலகர்களுக்கான பாடநெறிஎனஇக்குறுங்கால நெறிகள் வழங்கப்படவுள்ளன.

இதற்கான நடவடிக்கைகளை வட—கிழக்கு மாகாண முகாமைத்துவ அபிவிருத்தித் திணைக்களப் பணிப்பாளர் எம்.ஏ.சி.முகைதீன் மேற்கொண்டுள்ளார். (க-52)

## 128 சமுர்த்தி ஊக்குவிப்பாளருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இராணுவ கட்டுப்பாடற்ற வவுணதீவு பட்டிப்பளை வாகரைப் பிரதேச செயலக பிரிவுகளிலுள்ள 128 சமுர்த்தி ஊக்குவிப்பாளர்களுக்கு கடந்த வியாழக்கிழமை சமுர்த்தி உத்தியோகத்தர்களாக நியமனக் கடிதங்கள் வழங்கப்பட்டன.

காத்தான் குடியில் நடைபெற்ற வைபவத்தின் போது தபால் தொலை தொடர்புகள் தொடர்பு சாதன பிரதியமைச்சர் ஏ.எல்.எம். ஹிஸ்புல்லா நியமனக் கடிதங்களை கையளித்துள்ளார். (க-60)

## கோப்பாய் கோட்ட அதிபர், மற்றும் ஆசிரியர்கள் தமது பிரச்சனைகளை தெரியப்படுத்தவும்

(அச்சுவேலி)

இலங்கை தமிழர் ஆசிரிய சங்கக் கோப்பாய்கிளையினர் தமது பிரிவிற்குட்பட்ட பகுதியில் கடமையாற்றும் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள் ஆகியோர் தமது பிரச்சனைகள் குறித்து மேற்படி அமைப்பிடம் தெரியப்படுத்துமாறு செயலர் க. சின்னராசா தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்: சம்பந்தப்பட்ட பகுதி கல்விப் பணிப்பாளருடாக தொடர்பு கொண்டு பாதிக்கப்பட்டவர்கள் பிரச்சனைக்கு உரிய வகையில் தீர்வு காணப்படும்.

விண்ணப்பத்தை அனுப்பும் போது இரு பிரதிகள் செயலாளர், இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் என்ற முகவரிக்கு அனுப்புமாறு செயலாளர் கேட்டுள்ளார். (க-57)

## மட்டக்களப்பில் நிறுவப்படும் பிராந்திய ஒலிபரப்பு நிலையம்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபன பிராந்திய ஒலிபரப்பு நிலையம் அமைக்சப்படவுள்ளதாக தபால் தொலைத் தொடர்புகள் தொடர்புசாதனபிரதிஅமைச்சர் எம்.எல்.ஏ.எம் ஹிஸ்புல்லா தெரிவித்தார்.

யுனெஸ்கோ நிறுவனத்தின் அனுசரணையுடன் இலங்கை ஒலிபரப்புக்கூட்டுத்தாபனம் மட்டக்களப்பில் அமைக்கவுள்ளது. (க-60)

### இன்று பொதுக்கூட்டம்

[கரணவாய்]

வடமராட்சி உதை பந்தாட்ட மத்தியஸ்தர்கள் சங்கத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவும் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு யா/ தேவரையாளி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இந்தக் கூட்டம் மத்தியஸ்தர் சங்கத் தலைவர் எஸ். அருளானந்த சோதி தலைமையில் இடம் பெறவுள்ளது. (க-28)

### நாச்சியம்மையார் தினம் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.சைவபரிபாலன சபையினரால் இன்று சனிக்கிழமை நாவலர் ஆச்சிரம மண்டபத்தில், 'புண்ணியநாச்சியம்மையார் தினம், கொண்டாடப்படுகின்றது.

சைவபரிபாலனசபை உபதலைவர், சைவப்புலவர் வ. கந்தசாமி தலைமையில்நடைபெறும் இந்நிகழ்விற்கு பிரதம விருந்தினராக சாவகச்சேரி இந்துக்கல்லூரி அதிபர் க.சந்திரசேகரா கலந்து கொள்ளவுள்ளார்.

இந்நிகழ்வில் நல்லைஆதீன குருமகா சன்னிதான முதல்வர் ஸ்ரீல ஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்தபரமாச்சார்ய சுவாமிகள் கலந்து கொண்டு அருளுரை வழங்குவார். (க-5)

### பவள விழா

(அச்சுவேலி)

நாவலம்பதிமக்களின் சமய ஈடேற்றத்திற்காய் அயராது நீண்டகாலமாக அருந் தொண்டாற்றி வருபவரும் நாவலம்பதி கந்தசுவாமி கோயில் பிரதமபூசகருமாகிய சி. சிவகுரு குருக்களின் ஆத்மீக சேவையை பாராட்டி கிராம மக்களின் ஆதரவுடன் அடுத்த மாத முற்பகுதியில் பவள விழா எடுப்பதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளது. (க-57)

### சரவணையில் கூட்டுறவுக்கிளை திறக்கப்படவில்லை

(சரவணை)

சரவணைப்பகுதியில் மக்கள் மீண்டும் மீளக்குடியமர்ந்த பின்பும் நீண்டகாலமாக கூட்டுறவுச்சங்கக்கிளை திறக்கப்படவில்லையென பொது மக்கள் தரப்பில் புகார் தெரிவிக்கப்படுகிறது.

மீளக்குடியமர்ந்தமக்களின் தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்வதற்கு இக்கூட்டுறவுச் சங்கக்கிளை திறக்கப்படாததனால் பொதுமக்கள் பெரிதும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர் எனத்தெரிவிக்கப்படுகிறது.

இந்தவிடயம் தொடர்பாக வேலணைப்பிரதேசசெயலர், வேலணை ப.நோ.கூ.ச. நிர்[illegible]ன் கவனத்திற்கு கொண்டுவந்தும் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை என அப்பகுதிமக்கள் விசனமடைந்துள்ளனர். (க-5)

### செயலாளர் நியமனம்

(புலோலி)

பருத்தித்துறை நகர சபையின் செயலாளராக எஸ். கமலேஸ்வரன் வடக்கு-கிழக்கு மாகாண உள்ளுராட்சி திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை நகர சபைச் செயலாளர் என். சோமசுந்தரம் இளைப்பாறியுள்ளார். (க-52)

### நாளை விசேட பூஜை

[யாழ்ப்பாணம்]

சுன்னாகம் பழனி முருகன் ஆலயத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை விசேட பூஜைகள் நடைபெறவுள்ளன,

ஆலயத்தின் பதினான்காவது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி சிறப்பு வைபவங்கள் நடைபெறவுள்ளதுடன் நண்பகல் மகேஸ்வர பூஜையும்நடைபெறவுள்ளது. (க-01)

## (இராசி பலன்)

19.02.2000
சனிக்கிழமை
(தமிழுக்கு மாசி 07)

பூரணை இரவு 11.03 வரை, ஆயிலியம் காலை 11.50 வரை, மரணயோகம் இராகுகாலம் காலை 10.02 முதல் 11.30 வரை, சுபநேரம் மாலை 4.00 முதல் 5.30 வரை மாசிமகம், பூரணை விரதம்.

**மேடம்:**
தொழில் மந்தம், தேவையற்றபயணம், யோசனை.

**இடபம்:**
பயனற்ற செயல். கோப மிகுதி. பொருள் இழப்பு.

**மிதுனம்:**
கூடிப்பேசுதல், கல்வி மேன்மை, தியாகம்.

**கடகம்:**
குடும்ப வெறுப்பு, மனக் குழப்பம், தடுமாற்றம்:

**சிங்கம்:**
தந்தையார் அறிவுரை, வெளியூர் செய்தி, பண வரவு.

**கன்னி:**
கீழ்படிவு, காதல் பகை மனக்கலக்கம்.

**துலாம்:**
காரிய அனுகூலம், சயன சுகம், பயண உல்லாசம்.

**விருச்சிகம்:**
போட்டியில் ஜெயித்தல், வாக்குவசீகரம், புகழ்.

**தனுசு:**
கடும்யோசனை, தவறிழைத்தல். அமைதிக்குறைவு.

**மகரம்:**
உடல் உபாதை, சகோதரி கோபம், குழம்பித்தெளிதல்

**கும்பம்:**
சுபகாரியம், நண்பர் ஆதரவு, கலகலப்பு.

**மீனம்:**
எதிர்பார்த்த உறவு, முயற்சி பலிதம், சுபச்செலவு

(இலங்கை நேரப்படி கணிக்கப்பட்டது)

- அனுஷியா

### வடக்கு - கிழக்கு மாகாணத்தில்

## முகாமைத்துவ அபிவிருத்திப் பயிற்சிகளை திருமலையில் நடாத்துவதால்யாழில். சிரமம்

வடக்கு - கிழச்கு மாகாண முகாமைத்துவ அபிவித்தி பயிற்சி திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் பயிற்சிகள் வரவேற்கத்தக்கதாகும். எனினும் சகலபயிற்சிகளும் திருகோணமலையில் நடாத்தப்படுவதால் யாழ்ப்பாணத்தில் கடமையாற்றும் உள்ளூராட்சி உத்தியோகத்தர்கள் பெரிதும் சிரமப்படுகின்றனர்.

நல்லூர் பிரதேச சபைத் தலைவர் திருமலையில் செயற்படும் முகாமைத்துவ பணிப்பாளருக்கு அனுப்பிய செய்தியில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; போக்குவரத்துப் பிரச்சனை, போக்குவரத்தால் ஏற்படும் நிதி நிலமை தற்போது உள்ள சூழ்நிலையில் இங்குள்ள சபையால் ஈடு செய்ய முடியாது. தங்களால் கோரப்பட்ட சகல விபரங்களும் அனுப்பிவைக்கப்பட்டும் இங்குளளவர்கள் பங்குபற்ற முடியாத நிலமையிலுள்ளமை தாங்கள் அறிவீர்கள்.

இச் சபையில் கடமையாற்றும் உத்தியோகத்தர்களை அனுப்புவதாக இருந்தால் பெரியதொரு தொகையைச் சபை எதிர்நோக்க வேண்டியுள்ளது. இது போலத்தான் ஏனைய நிறுவனங்களும் உள்ளன.

தங்களால் ஒழுங்கு படுத்தும் பயிற்சித்திட்டத்தை யாழ்ப்பாணத்தில் நடைமுறைப்படுத்தினால் பலர் பங்கு கொள்ளலாம்.

தங்கள் திணைக்களத்தால் முன்னெடுக்கப்படும் பயிற்சி வகுப்புக்கள் இங்கும் நடத்தும்படி கேட்டுக்கொள்கின்றேன் அதுவரை விபரங்கள் சேகரிப்பதில், எதுவிதபயனுமில்லை.

கணனிமுறைஉள்ளூராட்சி, முறை போன்ற சகல பயிற்சிகளும் இங்கு நடாத்தப்படுவது பயன் தருமெனக் கேட்டுக் கொள்கின்றேன்.

இவ்வாறு அச்செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(க)

### நிர்வாகிகள் தெரிவு

(இருபாலை)

இருபாலை கிழக்கு சன சமூக நிலைய நிர்வாகிகள் தெரிவு அண்மையில் நடைபெற்றது.

தலைவராக கி. தங்கவடிவேல், செயலாளராக செ. தர்மகுமரன், பொருளாளராக உ. நிருஷன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

மேலும், நிர்வாகசபை உறுப்பினர்களாக எண்மர் தெரிவு செய்யப்பட்டனர்.

(க)

## யாழ். மாநகர முதல்வர் பதவியை கந்தையன் ஏற்க வேண்டும்

### சபை உறுப்பினர் தெரிவிப்பு

யாழ். மாநகர முதல்வர் பதவியை செல்லையன் கந்தையன் ஏற்று திறம்பட செயலாற்ற வேண்டும். எனவும் தமிழ் மக்களின் நலனை கருத்தில் கொண்டு அவருக்கு பூரண ஆதரவு வழங்க நான் தயார்.

மேற் கண்டவாறு யாழ். மாநகர சபை உறுப்பினரும் புளொட் அமைப்பின் உறுப்பினருமான முத்துக்குமாரு தவநாதன் கடித மூலம் கேட்டுள்ளார்.

அக்கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

மேற்படி சபை முதல்வர் இல்லாத நிலையில் பிரதி முதல்வர் தலைமையில் இயங்கிக்கொண்டிருந்தாலும் மாதாந்த கூட்டங்கள் ஒழுங்காக நடை பெறுவதில்லை. இதனால் வேலைத் திட்டங்கள் மேற்கொள்வதில் உறுப்பினர்களுக்கு சில அசௌகரியங்கள் ஏற்படுகின்றன.

மேலும் மக்கள் தங்களால் தெரிவு செய்யப்பட்ட தலைவர், பிரதிநிதிகள் ஆகியோரை நேரில் சந்தித்து தமது குறை நிறைகளை தெரிவிப்பதற்கு எவ்வித வழியும் இல்லை.

ஆகவே மக்கள் நாளாந்தம் மாநகராட்சி மன்றம் சென்று முதல்வரையோ அன்றி பிரதி முதல்வரையோ சந்திப்பதற்கு சந்தர்ப்பம் அமையக் கூடியதாக யாழ்ப்பாணத்தில் இருப்பவர் முதல்வராக நியமிக்கப்படுவது பொருத்தமானதாகும்.

இவ்வாறு அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

### அச்சுவேலி குடும்பஸ்தர் பிரான்சில் மாரடைப்பால் மரணம்

(பாரிஸ்)

அச்சுவேலியைச் சேர்ந்த குடும்பஸ்தர் ஒருவர் மாரடைப்பால் பிரான்சில் மரணமாகிய பரிதாப சம்பவம் கடந்த 14 ஆம் திகதி இடம் பெற்றது.

எஸ். ஆறுமுகம் [வயது-55] என்பவரே மரணமானவர் ஆவார்.

இவரது இறுதிக் கிரியைகளில் பங்குபற்றும் முகமாக ஜேர்மனியில் உள்ள இவரது மனைவி வனிதாமணி மற்றும், பிள்ளைகளான கிருஷான், கிரிதரன், கிருபாலினி ஆகியோர் அங்கிருந்து புறப்படுவதற்கான முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளையில் இவரது மற்றொரு மகன் ஆ. கிருபாகரன் [வயது-22] இரு வருடங்களுக்கு முன் சுவிஸில் கத்திக் குத்திற்கு இலக்காகி கொலையுண்டமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. ]ச]

### பதவி உயர்வு

கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரி அதிபர். திரு. எஸ்அம்பலவாணர் பதவிஉயர்த்தப்பட்டு கரவெட்டி கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

கரவெட்டிக்கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர். திரு. எஸ். புஸ்பலிங்கம் பருத்தித்துறைகோட்ட உதவிக்கல்விப் பணிப்பாளராக இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

(க 52)

### அக்கினி பெருமூச்சு

தே .தேவானந்தாவின் நெறியாள்கையில் யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் உருவாக்கிய 'அக்கினிப்பெருமூச்சு, நாடகம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணிக்கு வடமராட்சிமத்திய மகளிர் கல்லூரிகலையரக்கத்தில் நடைபெறவுள்ளது.

(க-23)

## உத்தரபிரதேச ரயில் குண்டு வெடிப்பு 16பேர் காயம்; விசாரணை தீவிரம்!

(புதுடில்லி)

இந்தியாவின் வடக்கு உத்தரப் பிரதேசத்தில் கான்பூர் அருகே நேற்றுமுன்தினம் இரவு ஏற்பட்ட பாரிய குண்டு வெடிப்பில் 16 பேர் படுகாயங்களுக்குள்ளாகினர். மூவரின் நிலை கவலைக்கிடமாக உள்ளது.

காயமடைந்தோர் உடனடியாக அருகில் உள்ள மருத்துவ நிலையத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டு தீவிர சிகிச்சைக்குட்படுத்தப்பட்டுள்ளனர்.

இக்குண்டு வெடிப்பு அனர்த்தம் குறித்து புலன் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன,

லக்னோ நோக்கி சென்றுகொண்டிருந்த புகையிரதத்திலேயே இக்குண்டு வெடிப்பு இடம்பெற்றுள்ளது.

(க-9)

### இந்தியாவிற்கு விஜயம் செய்யும் கம்போடியப் பிரதமர் யூங்சின்

(இலண்டன்)

கம்போடிய நாட்டுப் பிரதம மந்திரி யூங்சின் இந்தியா- மியான்மார் ஆகிய நாடுகளுக்கு இவ் வார இறுதியில் 4 நாள உத்தியோக பூர்வ விஜயம் ஒன்றை மேற்கொள்ளவுள்ளார்.

இந்திய விஜயத்தின் போது பிரதமர் அடல்பிஹாரி வாஜ்பாய் மற்றும் முக்கிய பிரமுகர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடாத்தவுள்ளார்.

இரு நாட்டு வர்த்தகம், பொருளாதாரம், தொழில்நுட்பம், விஞ்ஞானம், விவசாயம் சம்பந்தமான உடன்படிக்கை ஒன்றிலும் கைச்சாத்திட இருப்பதாகவும் அந்நாட்டு வெளியுறவு அமைச்சு அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை —

கடந்த 20 ஆண்டுகளின் பின் இந்தியா வருகை தரவிருக்கும் முதலாவது கம்போடிய பிரதமர் யூங்சின் என்பதும் இங்கு குறிப்பிடத்தக்கது.

(க-9)

### அணு ஆலை மூடப்பட்டது

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் வெஸ்ற் ஜெஸ்ரரில் உள்ள ''இந்தியான்றிவர் 2'' அணுவாலையில் 4 மின்பிறப்பாக்கி இயந்திரங்களில் ஒன்றில் கசிவு ஏற்பட்டதைத் தொடர்ந்து அவ் ஆலை வலுக்கட்டாயமாக மூடப்பட்டுள்ளது.

காலவரையறையற்று இது மூடப்பட்டிருக்கும் என்று தெரியவருகிறது. (க-9)

## இமாலயப் பிரதேச மோதல்களில் அப்பாவிகளே பெரிதும் பலியாகின்றனர்

### -ஐ.நா. அதிகாரி கவலை

(காத்மண்டு)

இமாலயப் பிரதேசத்தில் நேபாளப் பகுதியில் மாவோ சிந்தனைகளை பின்பற்றும் போராட்டக் குழுக்களுடனான மோதலில் ஒன்றுமறியாத பொதுமக்களே பலியாகின்றனர் என ஐக்கிய நாடுகள் சபை அதிகாரி ஒருவர் கவலை தெரிவித்துள்ளார்.

மன்றங்களின் தீர்ப்பின் அடிப்படையில் ஏராளமான பொதுமக்கள் கொல்லப்படுவதும் நாட்டின் தலைமைகள் இத்தகைய நடவடிக்கைகளை கட்டுபடுத்தாது இருப்பதும் மிகுந்த மனவேதனை தருவதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதுவரை, தீவிரவாதக் குழுக்கள் 200 க்கும் அதிகமான பொதுமக்களை கொன்றொழித்துள்ளதாகவும், நேபாள பொலிஸாரினால் 800 க்கும் அதிகமானோர் கொல்லப்பட்டிருப்பதாகவும் சர்வதேச மன்னிப்புச்சபை குற்றம் சுமத்தியுள்ளது. (க-9)

### சிலி நாட்டின் முன்னாள் ஆட்சியாளரின் விடுதலையை தாமதம் செய்யவும்

(புவனர்ஸ்அயர்ஸ்)

சிலியின் முன்னாள் சர்வாதிகார ஆட்சியாளர் ஒகஸ்ர பினாஸேயின் விடுதலையை தாமதம் செய்யுமாறு அவரது எதிராளிகள் விடுத்த கோரிக்கைக்கு ஆதரவாக பிரிட்டிஷ் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியுள்ளது.

ஒகஸ்ர பினாஸேயின் உடல் நலம் குறித்த மருத்துவ அறிக்கைகள் உடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும் எனவும் நீதிமன்றம் பணித்திருப்பதாகவும் தெரிய வருகிறது.

இதேவேளையில் 83 வயதான இச்சர்வாதிகாரி, சிலியில் ஆயிரக் கணக்கான பொதுமக்கள் கொன்றுகுவிக்கப்பட காரணமாக விளங்கியவர் என்ற குற்றச்சாட்டின் பேரில் நீதிமன்றில் வழக்குத் தொடுக்கப்பட்டிருக்கின்றமை தெரிந்ததே. (க-9)

## கார்கில்விவகாரம் தொடர்பான அறிக்கை விரைவில் பாராளுமன்றில் சமர்ப்பிப்பு

### மத்திய விவகார அமைச்சர் தகவல்

(புதுடில்லி)

இந்திய- பாகிஸ்தானிய கார்கில் எல்லைக்கோட்டைத் தாண்டி பாகிஸ்தானிய துருப்புக்கள் ஆக்கிரமிப்பு செய்தமை தொடர்பான விசாரணை அறிக்கை பூர்த்தி செய்யப்பட்டு விட்டதாக மத்திய பாராளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் விமோத் மகாஜன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்; சுப்பிரமணியம் அறிக்கை எனப்படும் இவ் அறிக்கை எதிர் வரும் வரவு செலவு திட்ட விவாதத்தின் போது பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனவும் தெரிவித்துள்ளார்.

புதுடில்லியில் அண்மையில் கூடிய மத்திய அமைச்சரவைக் கூட்டத்திலேயே மேற்கண்ட தகவலை அவர் வெளியிட்டார். (க-7)

### உலக வலம்

### கலிபோர்ணியாவில் விமான விபத்து

(நியூயோர்க்)

கலிபோர்ணியாவில் டி.சி. 8 ஏரக சரக்கு விமானம் ஒன்று விபத்துக்கு உள்ளாகியதில் 3 பேர் பலியாகியதாக அச்சம் தெரிவிக்கப்படுகின்றது.

விபத்துக்குள்ளாகிய சரக்கு விமானம் புறப்பட்ட சிறிது நேரத்தில் இராணுவத்தளம் ஒன்றின் அருகில் விபத்துக்கு உள்ளாகியதாகவும், 3 பணியாளர்கள் மட்டும் இவ்விமானத்தில் இருந்தார்கள் என்றும் தெரியவருகிறது.

(க-5)

### பீஹாரில் இரண்டாம் கட்டவாக்கெடுப்பில் தேசியஜனநாயக கூட்டணி முன்னணியில்

(புதுடில்லி)

பீஹார்மாநிலத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற 2 ஆம் கட்டவாக்குப் பதிவின்போது இடம்பெற்ற வன்முறைகளில் 11 பேர் கொல்லப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

வாக்குப் பதிவின்போது முறைகேடுகள், ஆள்மாறாட்டம், வன்முறைகள் இடம் பெறாத வண்ணம் பலத்த பாதுகாப்புக்கள் ஏற்படுத்தப்பட்டிருந்த போதிலும் வன்முறைகள், ஆள்மாறாட்டம் என்பன இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

நேற்று நண்பகல்வரை கிடைத்த முடிவுகளின்படி தேசிய ஜனநாயகூட்டுக்கட்சி 118 ஆசனங்களைப் பெற்று முன்னயிணில் உள்ளதாகவும் ஏனைய இதர கட்சிகள் 31 ஆசனங்களைக்கைப்பற்றியுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

(க-5)

யாழ். மாவட்டத்தின்

# அரச சார்பற்ற நிறுவனங்களுக்கு தொடர்புஊடகங்கள் அனுப்பிவைப்பு

(தென்மராட்சி)

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் இருந்து கொழும்பில் உள்ள மனிதநேய அமைப்புகளின் ஒன்றியத்துடன் யாழ்ப்பாண மாவட்ட நிலைமைகளைஉடனுக்குடன் தெரிவிக்க உதவும் பொருட்டு ஒன்றியம் இணையத்துக்கு கணனி-மற்றும் ஈமெயில் சேவைக்கான சாதனங்களை அண்மையில் அனுப்பிவைத்துள்ளது.

இதன்மூலம் யாழ்ப்பாணத்தில் மனிதஉரிமை மீறல்கள் மற்றும் புனரமைப்பு புனர் வாழ்வுத்திட்டங்கள் மற்றும் கல்வி, சுகாதார போக்குவரத்து விடயங்கள் பற்றியும் உடனுக்குடன் உரியதகவல்களை ஈமெயில்மூலம் அனுப்பிவைக்கும் எனவும் தெரியவருகின்றது.

இத்திட்டத்தின் அடிப்படையில் மேற்படி துறைகளில் விபரங்களையும் தகவல்களையும் திரட்டும் பொருட்டு வடமராட்சி, வலிகாமம், தென்மராட்சி பிரதேசங்களில் தகவல்களைத்திரட்டுவதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ள தாகவும் அறியப்படுகின்றது.

யாழ். மாவட்ட அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் 12 உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்துள்ளன என்பது குறிப்பிடத்தக்கதாகும். (க-77)

## வல்லிபுரம், துன்னாலைப் பகுதிகளில் பயிர்களை நாசம்செய்யும் காட்டுப்பன்றிகள்

வல்லிபுரம், துன்னாலைக் கிராமங்களில் காட்டுப்பன்றிகள் விவசாயிகளின் பயிர்களை அழித்து நாசஞ்செய்து வருவதாக புகார் செய்யப்பட்டுள்ளது.

இரவுவேளைகளில் வயல்களுக்குள்ளும், தோட்டங்களுக்குள்ளும் புகுந்துகொள்ளும் பன்றிகள் அங்குள்ள பயிர்களை அழித்து நாசம் செய்வதால் விவசாயிகள் பாதிப்புகளுக்கும் நட்டத்திற்கும் உள்ளாகி வருவதாகக் கவலை தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தம்மை இவ்விவசாயப் பாதிப்புகளிலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனக் கோரிக்கை விடுத்துள்ளனர். (க-52)

## அச்சுவேலி வைத்தியசாலையில் சீரற்ற மின்சார விநியோகம்

### நோயாளர் விசனம்

(அச்சுவேலி)

அச்சுவேலி அரசினர் வைத்தியசாலைக்கு மின்சார சபையினால் வழங்கப்பட்டு வரும் மின்சாரம் சீரின்மையால்நோயாளர்களும், வைத்தியர்களும் பெருஞ் சிரமங்களை எதிர் நோக்குவதாகப் புகார்தெரிவிக்கப்படுகின்றது.

முன்னர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் மாத்திரம் மின்வெட்டு அமுலில் இருந்தது. ஆனால் தற்போது ஒழுங்கற்ற மின் வெட்டினால் பல்வேறு பிரச்சினைகளை நோயாளர்களும், வைத்தியர்களும் எதிர் நோக்குகின்றனர் என பலத்த விசனம் தெரிவிக்கப்படுகின்றது. (க-57)

அச்சுவேலியில்

## முறைசாராக் கல்விப் பிரிவின் கீழ் தமிழ் - ஆங்கில தட்டச்சு, சுருக்கெழுத்து

முறைசாரா கல்விப் பிரிவின் தொழில் திறன் செயற்திட்டத்தின் கீழ் இந்த வருடம் அச்சுவேலி புனித தெரேசாள் மகளிர் கல்லூரியில் தமிழ் மற்றும் ஆங்கில தட்டச்சு,சுருக்கெழுத்து பயிற்சி நெறிகள் அடுத்த வாரம் ஆரம்பிக்கப்படவுள்ளதாக கல்லூரி அதிபர் அருட்சகோதரி எத்தல்வீவா தெரிவித்துள்ளார்.

இரு தொழில் பயிற்சி பிரிவுகளிலும் மாணவர்களின் எண்ணிக்கை மட்டுப்படுத்தப் பட்டிருப்பதனால் இப்பயிற்சிகளில் இணைந்து கொள்ள விரும்புவோரை உடனடியாக கல்லூரியுடன் தொடர்பு கொள்ளுமாறும் அவர் மேலும் தெரிவித்துள்ளார் .

கடந்த வருடம் இப்பாடசாலையில் முறைசாரா பிரிவின் கீழ் நடாத்தப்பட்ட தமிழ்தட்டச்சுசுருக்கெழுத்து பயிற்சியில் பயின்றோரில் மூவர் அதிவிசேட சித்தியடைந்துள்ளதுடன் ஏனைய அனைவரும் சித்தியடைந்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (க-14)

## யாழ். சிகைஒப்பனையாளர் சங்க அச்சுவேலி கிளை நிர்வாக தெரிவு

யாழ். மாவட்ட சிகை ஒப்பனையாளர் சங்கத்தினரின் அச்சுவேலிக்கான கிளை-01 நிர்வாகக்குழுதெரிவு கடந்த 16ஆம்திகதி மேற்படிசங்கத்தின் தலைவர் ஆ.சிவலிங்கம் தலைமையில்இடம்பெற்றது.

தலைவர் க. செல்வம் செயளாளர்:வ.குணபாலு, பொருலாளர் கோ.தவநேசன் ,உப- தலைவர் செ.நவநிதி, உபசெயலாளர் சி: லோகநாதன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகராக க. மனோகரன் தெரிவு செய்யப்பட்டார் நான்குபேர் கொண்ட நிர்வாகசபையும்தெரிவுசெய்யப்பட்டது.

புதன்கிழமை தவிர்ந்த ஏனையநட்களில் காலை7.30 மணிதொடக்கம்மாலை7.03 மணிவரை மேற்படி சிகை அலங்கரிப்பு நிலையம் திறந்திருக்க வேண்டும்மெனவும், கட்டணவிபரம் பற்றியும் முடிவுகள் மேற்கொள்ளப்பட்டன.

நீர்வேலி,சிறுப்பிட்டி கோப்பாய்,புத்தூர் ஆகிய இடங்களை சேர்ந்த சிகை அலங்கரிப்பாளர் பலர் இந்நிகழ்வில்கலந்து கொண்டனர். (க-57)

## யூனியன் மாணவன் சாதனை

[யாழ்ப்பாணம்[

சைவபரிபாலன சபையால் நடாத்தப்பட்ட பண்ணிசைப் போட்டியில் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி மத்திய பிரிவு மாணவன் செல்வன் குலேந்திரன் ஜெகதீசன் முதலாம் இடத்தைப்பெற்று தங்கப்பதக்கத்தை தட்டியுள்ளார்.

மேற்பிரிவு மாணவன் செல்வன் சத்தியமூர்த்தி லக்மன் இரண்டாம் இடத்தைப் பெற்று வெள்ளிப்பதக்கத்தை தட்டியுள்ளார். (க-5)

## பாடசாலை சிறார்களுக்கு பால் வழங்கல்

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை ஸ்ரீராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமத்தினால், பாடசாலை சிறார்களுக்கு பால்மாகரைத்துக்கொடுக்கும் திட்டம் நாளை மறுதினம் 21ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாக உள்ளது.

இத்திட்டத்தின் முதற்கட்டமாக, துன்னாலை காசிநாதன் வித்தியாலயம், அல்வாய் அம்பாள் வித்தியாலயம், அல்வாய் வடக்கு இந்து தமிழ்க் கலவன் பாடசாலை, புலோலி கிழக்கு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை, துன்னாலை மெதடிஸ்த மிஷன் பாடசாலை, கற்கோவளம் மெதடிஸ்த மிஷன் பாடாசலை ஆகிய இடங்களில் பால்மா கரைத்துக்கொடுக்கப்படவுளது. (க-5)

## ஐஸ் தயாரிப்போர் உரிமம் பெறவும்

(யாழப்பாணம்)

தற்போதைய வெப்பமான கால நிலை காரணமாக ஐஸ் உற்பத்தித் தொழில் நாளுக்கு நாள அதிகரித்து வருகின்றது. எமது பகுதியில் சுகாதார முறைப்படி ஐஸ் தயாரிக்கப்படுவதை உறுதிப்படுத்தும் பொருட்டு யாழ். மாநகர சபைப்பகுதியிலுள்ள சகல ஐஸ் உற்பத்தியாளர்களையும் 2000-ம் ஆண்டிற்கான உரிமத்தைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ்.மாநகர சபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி இ. தெய்வேந்திரன் கேட்டுள்ளார். (ந)

## இராசவள்ளி கிழங்குஉற்பத்தி அதிகரிப்பு

(தென்மராட்சி)

யாழ்.மாவட்டத்தில் இம்முறை இராசவள்ளிக்கிழங்கு உற்பத்தி அதிகரித்துள்ளது. அதன்காரணமாக இதற்கான விற்பனைவாய்ப்புக்கள் மிகவும் குறைவாகவேயுள்ளதாகத் தெரியவருகிறது.

அத்துடன் தற்சமயம்இம் மாவட்டத்தில் மொத்தமாக 300மெற்றிக்தொன் இராசவள்ளிக்கிழங்கு கையிருப்பில் இருப்பதாகஅறியப்படுகிறது.

திருநெல்வேலி சந்தையில் ஒருகிலோ இராசவள்ளிக் கிழங்கு 30ரூபா வாக விற்பனைசெய்யப்படுகிறது. [க-77]

# திறனாய்வுக் களம்

மண்ணின் அவலத்தை அப்பட்டமாக

## அரங்கினுக்கு கொண்டு வந்த "அக்கினிப் பெருமூச்சு"

13. 02. 2000 புத்தாயிரம் ஆண்டில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அக்கினிப் பெருமூச்சு என்ற நாடகத்தினைப் பார்க்கும் சந்தர்ப்பம் ஏற்பட்டது. யாழ். பல்கலைக்கழகத்தில் நாடகமும் அரங்கியலும் என்ற பாட கற்கை நெறியினை சிறப்புப் பாடமாகக் கற்கும் தேவானந் பரீட்சைக்காகத் தயாரித்த நாடகமே அக்கினிப் பெருமூச்சு:

''எம்மண்ணில் வாழும் மக்களின் உள்ளக் குமுறல்களே அக்கினிப் பெருமூச்சாக வெளிபேறுகிறது'' என்ற கருத்தினை மையமாகக் கொண்டு பல்வேறுபட்ட அரங்க உத்திகளினூடாக புதிய பரிமாணத்தினைப் பெறுகிறது. இன்றைய கால சமுதாயத்தில் நிலவும் கொடுமைகள், அதற்கு அடிபணியும் மக்கள், எதற்கும் முகம் கொடுக்காது சுயநலமே உருவமாகக் கொண்ட மனிதர்கள் கொடுரங்களைக் கண்டு பொறுக்காமல் பொங்கி எழும் இளைஞர்கள் போன்ற பல விடயங்களைத் துணிகரமாக அரங்கில் கொண்டு வருகிறார்.

அதிகாரத்தின் பிடிக்குள் அடங்கித் தம் பட்டம், பதவிகளைக் தாக்கின்ற கல்விமான்களை ''எங்களுக்கு நீங்கள் கரைச்சல் தரவேண்டாம் நாங்கள் எங்கட கதிரைகளைக் கட்டிப் பாதுகாக்க வேண்டும்'', ''நிறைய Intere Sting Casses எல்லாம் இருக்கும்'' என்ற உரையாடல்களினூடாக அழகாக எடுத்துக் காட்டுகிறார்.

கணவனின் நிலை அறியாது துடிதுடித்து அலறும் மனைவி, தம் பிள்ளைகளின் நிலை பற்றியறிய தாய்மார்கள் அனுபவிக்கும் கொடுரங்களுக்கு எல்லையில்லை என்பதை பல சம்பவங்களினூடாக எடுத்துக் காட்டுகிறார். தம்பிள்ளையின் நிலையை அறிவதற்காகதன்னுடைய கண்களைத் தோண்டிக் கொடுத்துவிட்டு பிரேதப் பெட்டிகளிடையே எதுதன் பிள்ளை எனத் தேடித்தடவி அலறித் துடிதுடிக்கும் தாயின் நடிப்புத்திறன் எம் நெஞ்சை உருகச் செய்து விட்டது. எமது சமூகத்தில் விதவைகளின் துயரமும் அவர்களின் துயரங்களை எள்ளி நகையாடும் சமூகம் பற்றியும் சித்தரித்துள்ளார். விதவை தாயின் நடிப்பு மேலும் சிறப்பாக அமைதல் வேண்டும். துயரத்தின் விளிம்பில் நின்ற பார்வையாளர்களுக்கு, ''எங்களுக்னெக நாங்கள் எங்கட பாட்டில இருப்பம்--'' என்று கூறும் சமுதாய மாந்தர்களின் நடிப்புத் துயரங்களை மறந்து சிரிக்கும் அளவிற்குசிறப்பாக அமைந்திருந்தது.

மரண வீட்டைக் காட்டும் எமது பண்பாட்டுக் கோலமான குத்துவிளக்கு, கொலைகளைக் காட்ட வெள்ளைச் சீலையிலிருந்து வடியும் குருதி, புரட்சியைக் காட்ட இளைஞர் எடுக்கும் சபதம், சமாதானப்போர் என்பதைக் காட்ட ''சமாதானப்போர்'' என்ற வாசகத்தை வெள்ளைச் சீலையில் திரை பிடித்துக் காட்டல், பிணங்களின் அவலக் குரல்கள், செய்திகளைச் சொல்ல பயன்படுத்தப்பட்ட தொழில்நுட்பக் கருவியான Projector போன்ற பல விடயங்கள் நெறியாளரின் கற்பனையில் உருவாகிய அற்புதப் படைப்புக்களே.

மேடையில் வைக்கப்பட்ட ஆறு பிரேதப் பெட்டிகள், வீடு, Projector, பின்திரையில் செங்குத்தாகப் பொருத்தப்பட்ட வெள்ளைச்சேலை, வரையப்பட்ட மண்டை ஓடு இவையே மேடைக்காட்சியமைப்பாக அமைந்திருந்தது. பாத ஒளியூட்டல், பக்கஒளியூட்டல், பொட்டொளி போன்ற ஒளியமைப்புக்கள் உபயோகிக்கப்பட்டிருந்தன. பிரேதப் பெட்டிகளிலிருந்து வெளிவந்த செந்நிற ஒளி அதிக தாக்கத்தை விளைவிப்பதாக இருந்தது.

வேட உடை ஒப்பனை குறியீட்டுப் பாத்திரங்களாகவே அமைந்திருந்தன. விதவைப் பாத்திரத்தின் உடையில் நேர்த்தி குறையின் இன்னும் எடுப்பாக இருந்திருக்கும். புரட்சிகரமாக வந்து இளைஞர் அணிந்த சிவப்பு மஞ்சல் உடை, முட்பற்றையை அணிந்த பெண், சிப்பாய்களைக் காட்ட தலையில் அணிந்த தொப்பி, கல்விமான்களைக் காட்ட அவர்கள் அணிந்த கோட்சூட். Ciog. அதிகாரத்தைக் காட்ட கறுப்பும் செந் நிறமுடைய உடை போன்றவை குறியீடாகவே அமைந்திருந்தன.

பரதம், பிறேக், கூத்து போன்ற நடனங்கள் இடம் பெற்றன. பிணங்கள் சிவப்புக்கொடி பிடித்து கடும் கோர நடனம் மிகச் சிறப்பாக அமைந்திருந்தது. றொபேட்டின் இசை அமைப்புடன் சுகன்னியா, கிரிஸ்ரீனா, பாஸ்கரனின் பாடல்கள் இனிமையாக இருந்தது. ஒரு சில கட்டங்களில் இசை வழுகியமையும் அதைச் சீர் செய்து நாடகத்தை நகர்த்திய இடங்களும் உண்டு. ''புதருக்குள் முயல்கள் இல்லை வேலியில் ஓணான் இல்லை--- ''என்ற பாடல் நன்றாக இருந்தது. குழு நாட்டார் பாடலான தாலாட்டுப் பாடலும் இந்நாடகத்திலிடம் பெற்றது.

பிரேதப்பெட்டி வடிவிலமைந்த அழைப்பிதழின் வடிவம் கூட குறியீட்டுமொழியில்மைந்தமை குறிப்பிடத்தக்கது.

பல கலைகளின் கூட்டிணைப்பே நாடகமாகும். இந்த வகைகளில் இந்நாடகத்தில் பிரயோகிக்கப்பட்ட அனைத்து அரங்க மூலகங்களும் பொருத்தப்பாடாகவே அமைந்திருந்தன. ''செயல் விளங்க அரங்கு'' என்பதை அடிப்படையாகக் கொண்டே இந்நாடகம் தயாரிக்கப்பட்டது.

21 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலேயே ''அக்கினிப் பெருமூச்சு'' என்ற நாடகத்தினூடாக சிறந்த நெறியாளர் வரிசையிலே இடம் பிடித்த இவர் தொடர்ந்தும் தரமான படைப்புக்களை படைத்தல் வேண்டும்.

திருமதி. சந்திரிக்கா தர்மரட்ணம்
(சுண்டுக்குளி மகளிர் கல்லூரி ஆசிரியை)

எண்ணிய எண்ணியாங்கு
எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்
- குறள்

# வலம்புரி

## நம்பிக்கை ஒளிக்கீற்று

அரசியலமைப்புச் சீர்திருத்தத்தின் மூலம் இனப் பிரச்சினை மற்றும் தேசிய நெருக்கடிகளைத் தீர்க்கும்ஆரோக்கியமான முயற்சியை ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க உறுதியான நிலைப்பாட்டுடன் மேற் கொண்டு வருகிறார். மடியிலே நெருப்பைக் கட்டியது போல சீரற்ற அரசியலமைப்பைக்கொண்டு ஆளப்பட்ட தமிழர் அபாக்கியவான்களே. இப்பொழுதாவது நம்பிக்கை ஒளியொன்றைத் தர முனைந்திருப்பது பாராட்டுக்குரியதே.

இலங்கை வரலாற்றில் பல தடவை தோல்வி கண்ட முயற்சியாக இது அமைந்தமை துரதிஷ்டவசமானது தான். தோல்விகள் வெற்றியின் படிக்கற்கள் என்பார்கள். நமக்கு தென்டுகின்ற நம்பிக்கை ஒளிக்கீற்று நிச்சயமானதாய் - நிறைவானதாய் அமைய வேண்டுமென்பது எங்கள் எதிர் பார்ப்பாகும்.

விட்ட பிழைக்கு உடந்தையாக இருக்காது. தப்பிக்கொள்ள ரணில் விக்கிரமசிங்க யாப்புத் திருத்தத்திற்கு தாம் தடையாக இருக்கப் போவதில்லை என்று மனம் திறந்து கூறுகிறார். நல்ல சகுனம் தான். இத்தனை காலமும் அழுங்குப் பிடியாகபிழைக்கு மேல்குந்தியிருந்ததால் தமிழினம் பட்ட துயரும் கொடுத்த விலையும் எண்ணிலடங்கா: அவை தொடரக்கூடாது என்பதே அனைத்து அவல உள்ளங்களினதும் அபிலாசையாகும்.

மூன்றாம் தரப்பு மத்தியஸ்தராக வந்த நோர்வே அமைச்சர் முதலில் யுத்த நிறுத்தம் அதன் பின் சமாதானப் பேச்சு என ஒரே முடிவாக-நேர்மையாக கூறி முடித்துள்ளார். செவிகைப்பச்சொற் பொறுக்கும் பண்புடைவேந்தன் கவிகைக்கீழ் தங்கும் உலகு என்பது தமிழ் வேதம்.

பிறர் தமர்பாரா-பேதலியாத உள்ளத்தோடு உறுதியாக ஜனாதிபதியும் சம்பந்தப்பட்ட பெரும்பான்மையினத்துஅரசியல்வாதிகளும் இம்முறை செயற்படின் நாட்டில் சுதந்திரமும் சுபீட்சமும் முளைகொள்ளும் யாரொடும் பகை கொள்ளிலன் என்றபின் போர் ஒடுங்கத்தானே வேண்டும். இதனை கெனட் வொலிபேர்க் தீர்க்கமாக உணர்ந்து விட்டார்.

- அன்புடன் ஆசிரியர்

# குருநகர் மற்றும் கடலோர பகுதியில் கல்வி வசதி இன்றி 2850 பேர்

(தென்மராட்சி)

யாழ்ப்பாணத்தில் குருநகர், பாசையூர் கொழும்புத்துறை போன்ற இடங்களிலும் தென்மராட்சிப் பிரதேசத்தில் கைதடி நாவற்குழி கோகிலாக்கண்டி, தனங்களப்பு போன்ற இடங்களில் வாழ்ந்த கடற்றொழிலாளர்களின் பாடசாலை செல்கின்ற 2850 பிள்ளைகளுக்கு கல்விஉபகரணங்கள் போதியளவு இல்லாமையால் தமது கல்வியைத் தொடர முடியாத நிலையில் இருப்பதாகத் தெரியவருகின்றது.

இந்தப்பகுதியில் 1500 பிள்ளைகளும். பாசையூரில் 575 பேரும் கொழும்புத்துறையில் 175 பேரும் கைதடி, நாவற்குழி, கோகிலாக்கண்டி, தனங்களப்பு, பகுதிகளிலும் மொத்தம் 600 பேருக்கும் கல்வி உபகரணங்கள் அவசியம் தேவையாகவுள்ளதாக வடமாகாண கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம்யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள பொதுஸ்தாபனங்கள் மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்களிடம் உதவிகோரி கோரிக்கை விடுத்துள்ளது.

இதேவேளை தென்மராட்சி பிரதேசத்தில் இருந்து இடம் பெயர்ந்த நிலையில் இருக்கும் பல மாணவர்கள் இன்னமும் வேறுபாடசலைகளில் சேராமல் இருப்பதாகவும் தெரிய வருகின்றது. (க-77)

## மரங்கள் ஏலத்தில் விடப்படும்

(மானிப்பாய்)

மருதங்கேணி பிரதேச செயலர் பிரிவில் சட்டவிரோதமாக ஏற்றிச்சென்று பறிமுதல் செய்யப்பட்ட அம்மன் கிராம அலுவலர் பொறுப்பிலிருக்கும் பாலை மரங்கள். வேப்பமரங்கள் என்பன இம் மாதம் 21 ம் திகதி ஏலத்தில் விற்கப்படுமென மருதங்கேணி பிரதேச செயலர் வி. பி. வேலாயுத பிள்ளை அறிவித்துள்ளார். (க)

## இன்று தேர் உற்சவம்

(நெடுந்தீவு)

நெடுந்தீவு கரமத்தை கந்த சாமிகோயில் தேர்த்திருவிழா இன்று . சனிக்கிழமை காலை 9. 30 மணிக்கும் பிற்பகல் 5 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும்.

# சோலைபுரத்தில் மண் நிரப்பும் பணிகள்

[யாழ்ப்பாணம்]

கொட்டடியை அண்டிய சோலைபுரம் குடியேற்றத்தில் மண் நிரப்பும் வேலைகள் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மலசலகூடம் அமைக்கும் பணியும் இடம்பெறவிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

ஈழமக்கள் ஜனநாயக கட்சியினரின் யாழ். பிராந்திய அமைப்பாளரின் அனுசரணையுடன் யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் டக்ளஸ் தேவானந்தாவின் முயற்சியினால் இப் பணி முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. [க]

# மட்டு. காத்தான்குடியில் கொள்ளை ஒரே இரவில் சம்பவம்

காத்தான் குடிப்பகுதியில் ஒரே இரவில் ஆயுதம் தாங்கிய கும்பல் ஒன்றினால் நடாத்தப்பட்ட இரு பாரிய கொள்ளைச் சம்பவங்களால் அப்பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக மேலும் அறியப்படுவதாவது:

சந்தை வீதியிலுள்ள அப்துல் ஆசீஸ் என்பவரின் வீட்டினுள் நுழைந்த ஆயுதக் கும்பல் பிஸ்டலை அவரது மனைவியின் நெற்றியில் வைத்து இருவரையும் வீடொன்றினுள் பூட்டிவிட்டு அலுமாரியிலிருந்த 75 ஆயிரம் ரூபா பெறுமதியான நகைகளை கொள்ளையிட்டுள்ளனர்.

மத்திய வீதியில் ஹனீபா என்பவரின் வீட்டில் நுழைந்த கும்பல் இதேவிதமாக அனைவரையும் அறையினுள் பூட்டிவிட்டு 63 ஆயிரம் ரூபாபெறுமதியான நகைகள் மற்றும் பணம் என்பனவற்றை கொள்ளையிட்டுள்ளது. செவ்வாயிரவு 9. 30. மணிக்கும் 10. 30 மணிக்குமிடையில் இக்கொள்ளைகள் இடம்பெற்றுள்ளதாக பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. கொள்ளையர்கள் பிஸ்டல், கிரனேட் போன்ற ஆயுதங்கள் வைத்திருந்ததாகத் தெரிய வருகிறது. பொலிஸார் தீவிர விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (க-60)

# நெடுந்தீவு மக்களின் பிரச்சினைகளை "டக்ளஸ்" தொலைபேசி மூலம் அறிந்தார்

(நெடுந்தீவு)

கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்ட நாடாளுமன்றப் பிரதிநிதியும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் செயலதிபருமான டக்ளஸ் தேவானந்தா நெடுந்தீவுப் பொதுமக்களுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டு மக்களின் பிரச்சினைகளைக்கேட்டறிந்தார்.

நெடுந்தீவு பிரதேசசபைத் தலைவர் ஏ. டபிள்யூ. அரியநாயகம் ஈ. பி. டி. பி அரசியல்பொறுப்பாளர் கே. சிவராம் ஆகியோர் தலைமையில் இந்நிகழ்வு நடை பெற்றது.

இந்திய மீனவர்களும் மன்னார் மீனவர்களும் நெடுந்தீவுக் கடலில் மீன்பிடியில் ஈடுபட்டுள்ளனர். இந்நிலையில் இங்குள்ள மீனவர்களுக்கு தொழில் செய்யும் அனுமதி வழங்கப்பட வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கப்பட்டது.

பொது மக்களின் கடல் போக்குவரத்திற்கென படகு ஒன்றும் பொருள்களை எடுத்துவர பல. நோ. கூ. சங்கத்திற்கு ஒன்றுமாக இரண்டு படகுகளை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இம்முறை பயிற்சிக் கல்லூரிக்குச் செல்லும் ஆசிரியர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதால், அதனால் ஏற்படக் கூடிய வெற்றிடங்களுக்கு ஆசிரியர்களை நியமிக்கநடவடிக்கை எடுத்தல்.

கலைப்பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க நடவடிக்கை எடுத்தல் உட்பட பல்வேறு விடயங்கள் பற்றி ஆராயப்பட்டது.

குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக தேவையான நடவடிக்கை எடுப்பதாக அப்போது அவர் தெரிவித்தார். (க-82)

## இன்று அங்குரார்ப்பண கூட்டம்

[அச்சுவேலி]

அச்சுவேலி கவின் கலை மன்ற அங்குரார்ப்பண கூட்டம் இன்று 19 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு அச்சுவேலியில் இடம்பெறவுள்ளது.

அபிவிருத்தி ஆலோசகர் சின்னமணி தலைமையில் மேற்படி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

இக் கூட்டத்தில் ஈ. பி. டி. பி. யின் கோப்பாய்ப் பிரிவு அமைப்பாளர் ரவி, வலி. கிழ. பிர தேச செயலர் எஸ். குகதாசன் ஆகியோர் பங்குபற்றுவர். (க-57)

## புதிய கட்டடத் திறப்பு விழா

(புலோலி)

மேலைப்புலோலிவத்தனை மழலைகள் கல்விப் பூங்காவின் புதிய கட்டடத் திறப்பு விழாவும், கலைவாணி சனசமூக நிலையத் திறப்பு விழாவும் கல்விப் பூங்கா தலைவர் என். சோதிநாதன் தலைமையில் அண்மையில் நடை பெற்றது.

பருத்தித்துறை பிரதேச சபைத்தலைவர் ஐ. ஸ்ரீரங்கேஸ்வரன் சனசமூக நிலையத்தை திறந்து வைத்தார். கல்விப் பூங்காவின் புதிய கட்டடத்தை பிரதேச செயலர் ஆ. சிவசுவாமி திறந்து வைத்தார்.

இந்நிகழ்வில் தசாவதானி கதிரவேற்பிள்ளை புலோலி மேற்குகமக்காரர்சம்மேளனத் தலைவர் எஸ். விஸ்வநாதன் பருத்தித்துறை பிரதேச திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் எஸ். மகேந்திரன் உட்படப் பல பிரமுகர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். (க-52)

## பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் பாடசாலைக்கு தொழில் அதிபர் 10 ஆயிரம் ரூபா அனுப்பிவைப்பு

(புலோலி)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப்பாடசாலையின் அபிவிருத்திக்கென கொழும்பில் உள்ள தொழிலதிபர் ஒருவர் 10,000 ரூபா நிதி வழங்கியுள்ளார்.

கொழும்பில் உள்ள சுகந்தன் என்ரபிரைஸஸ் அதிபர். திரு. சுகந்தசீலன் அரவிந்தன் என்ற தொழிலதிபரே தனது தந்தையார் ஞாபகார்த்தமாக இந்நிதியை பாடசாலை அபிவிருத்திக்கு வழங்கியுள்ளார். (க-52)

# இந்துக்கள் மத்தியில் சிறப்புப்பெறும் மாசிமக விரத அனுட்டிப்பு

மாதம் தோறும்வரும் புண்ணிய காலங்களுள் மாசி மாதம்வருகின்ற ''மாசிமக'' புண்ணியகாலத்துக்கு தனிச் சிறப்புண்டு.

மக நட்சத்திரமும் பூரணையும் தொடர்புபடும் இப்புண்ணியகாலம் தீர்த்தமாடி இறைஅருளைப் பெறுவதற்கும் பாவங்களைக் கழுவுவதற்கும் வாய்ப்பானதாகும்.

தவ வாழ்வில் ஈடுபட்டு அஞ்ஞானத்தைப் போக்கி ஞானத்தை விருத்தி செய்ய முயலும் துறவியரும், புண்ணிய சாலிகளும் மாசிமாதம் முழுவதும் காசி பிரயாகை போன்ற புண்ணிய தீர்த்தங்களில் முப்பது நாளுமே தங்கி தீர்த்தமாடிப் பயன்பெறுவர்.

மாசிமாதம் முழுநாட்களிலும் நாளாக அமைவது மாசி மகம். முப்பது நாளும் தீர்த்தமாடிப் பயன்பெற வாய்ப்பு இல்லாதவர்கள் மாசிமக நாளிலாவது புண்ணியத்தைப் பெருக்க ஒதுக்கவேண்டும்.

''மாசிக் கடலாட்டுக் காணாதே போதியோ பூம்பாவாய்'' என்பது சம்பந்தர் வாக்கு பன்னிரு வருடங்களுக்கு ஒருமுறை ''மாமாங்கம்'' என்ற புண்ணிய நாள் அமைவதும் மாசி மகத்திலேயாகும்.

### ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள்

தமிழ்நாட்டில் கும்பகோணம், வேதாரணியம் போன்ற இடங்களிலும் சிறப்பாகப் பேணப்பட்டு. வந்த தீர்த்தச்சிறப்பை இன்று நாம் ஆலயங்கள்தோறும் உள்ள; புனிதகேணிகள், தீர்த்தக் கிணறுகளில் உள்ள நீரைப் பயன்படுத்தி நன்மை அடையலாம்.

''கங்கையாடிலேன் காவிரி ஆடிலென் எங்கும் ஈசன் என்னாத வாக்கு இல்லையே'' என்ற அப்பர்சுவாமிகளின் வாக்கின் அடிப்படையில் எங்கும் உள்ள புனித தீர்த்தங்களில் இறைவனை நினைந்து நீராடி பயன்பெறமுயல்வது- பயன்வெறுவது அறிவுடமையாகும்.

''பருவத்தே பயிர்செய்'' காலத்தினாற் செய்த நன்றி என்றதொடர்கள், உரிய காலத்தைப் பயன்படுத்த வேண்டும் என வற்புறுத்துகின்றன. ஆகவே மாசிமாதத்தில் வரும் இப்புண்ணிய காலங்களில் ஒன்றான மாசி மகத்தை நாமும் பயன்படுத்திடுவோம்.

## இன்றைய சிந்தனை

''மனவலிமை இல்லாதவன் சத்தர்ப்பத்திற்காக காத்து இருக்கிறான்; மனவலிமை உள்ளவன் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொள்கிறான்.,,

-ஓர் அறிஞர்-

# பிராந்திய அரசியலமைப்பு சபையே பொ.சே.ஆணைக்குழுவை நியமிக்கும்

## ஈ.பி.டி.பி.யின் முன்மொழிவு ஏற்கப்பட்டது

(கொழும்பு)

அரசியலமைப்புச் சீர்திருத்தம் தொடர்பாக ஆராயப்பட்டுவரும் அனைத்துக் கட்சிக் கூட்டம் நேற்றும் அலரி மாளிகையில் ஜனாதிபதி சந்திரிக்கா குமாரதுங்கா தலைமையில் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினால் முன்வைக்கப்பட்ட பின்வரும் யோசனைகள் ஏற்றுக்கொள்ளப்பட்டன.

அவற்றின் விபரம் வருமாறு

★ பிராந்திய எல்லையை மாற்றியமைப்பதுடன் அது தொடர்பான ஆலோசனைகளை மத்திய அரசு ஏற்றுக் கொள்ளுதல்.

★ தற்போது நடைமுறையில் இருக்கும் நாட்டில் எட்டில் ஒரு பகுதி மக்கள் பேசுகின்ற மொழிகளில் பதிவேடு பேணப்படவேண்டும் என்பதற்கு மேலாக தலைநகர் கொழும்பிலுள்ள அனைத்துத் திணைக்களங்கள் அரச அலுவலகங்களிலும் தமிழ் மொழியில்பதிவேடுகளும் பதிவுகளும் மேற்கொள்ளப்படுதல்

★ தற்போதையநிறைவேற்று அதிகாரமுடைய ஜனாதிபதி முறையை ரத்துச் செய்து அதிகாரமற்ற ஜனாதிபதியை பாராளுமன்றத்தால். தெரிவு செய்தல்.

★ பிராந்திய அரசியலமைப்புச்சபையை உருவாக்கி அச்சபையினூடாக பொதுச் சேவைஆணைக்குழுவின் நியமனங்களை மேற்கொள்ளல்,

போன்ற விதப்புரைகளே ஏற்று[illegible]எப்பட்டது.

நேற்று நடந்த அரசியலமைப்புச் சீர்திருத்தக் கூட்டத்தில் நீதி அரசியலமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ. எல். பீரிஸ் முஸ்லீம் காங்கிரஸ் தலைவர் அஸ்ரப் ஈ.பி.டி.பி,கட்சியின் செயலாளர் நாயகமும்பாராளுமன்ற உறுப்பினருமான டக்ளஸ் தேவானந்தா,பாராளுமன்ற உறுப்பினர் தவராஜா, கட்சி ஆலோசகர் டாக்டர் விக்கினேஸ்வரன் தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர்கள் இரா. சம்பந்தன், ஜோசப் பரராஜசிங்கம், மாவை சேனாதிராஜா, புளொட் அமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் த.சித்தார்த்தன், ரெலோவின் சார்பில் ஸ்ரீகாந்தா, அடைக்கலநாதன்உட்பட பலரும் கலந்து கொண்டனர். (ந)

### யுத்தத்தினால். . .

இக்கடன் திட்டத்திற்கென சுமார் 50மில்லியன் ரூபா நன்கொடையாக சேர்ந்துள்ளதாகவும் அதில் 6மில்லியன் ரூபா தனியாரிடம் இருந்து கிடைக்கப்பெற்றதாகவும் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்தரத்வத்த தெரிவித்துள்ளார்.

கடந்த நான்குவருடங்களாக நடைபெற்றுவரும் யுத்தத்தில் சுமார் 261 குடுபங்களைச் சேர்ந்த படைவீரர்களுக்கு இக் கடன் திட்டத்தின் மூலம் கடன் வழங்கப்பட்டுள்ளது. (வ)


## நாதன் களஞ்சியம்

எங்களிடம்

★ வெங்காயம், ★ உருளைக்கிழங்கு பொதிசெய்யும் நெட்பாக் ★ மரப்பெட்டி, ★ குளிர்சாதனப் பெட்டிக்கு உரிய காஸ் சிலிண்டர் மற்றும் ★ ஐஸ்கிறீம் கோன் ★ ஐஸ்பழக் குச்சிகள் மலிவாகப் பெற்றுக் கொள்ளலாம்.

நாதன் களஞ்சியம்
213 C, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.
TEL:- 021 - 2916
FAX:- 021 - 2916
(176)


## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கல்வியியல் துறை
விரிவுரையாளர்

திருமதி. J. இராஜநாயகம்
அவர்களின் தாயார்

### திருமதி. மார்க்கண்டு பரமேஸ்வரி

16 - 2 - 2000 அன்று மறைந்தமையை இட்டு துயருறும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு, எமது கண்ணீர் அஞ்சலியைக் காணிக்கையாக்குகின்றோம்.

பகுதி நேர - முழுநேர மாணவர்கள்
பட்டப்பின் கல்வி டிப்ளோமா

யாழ். பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.
(கி/83)

## கண்ணீர் அஞ்சலி

யாழ். பல்கலைக்கழக கல்வியல் டிப்ளோமாவில் பயில்பவரும் யாழ். வலய உடற்கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளருமான

திரு. த. அருணகிரிராஜாவின்
அன்புத் தந்தையார்

### வடிவேல் தங்கராஜா

அவர்களின் மறைவையிட்டு எமது ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்வதோடு எமது கண்ணீர் அஞ்சலிகளையும் காணிக்கையாக்குகின்றோம்.

பகுதிநேர கல்வியல்
டிப்ளோமா மாணவர்கள்

யாழ். பல்கலைக் கழகம்,
யாழ்ப்பாணம்.
(கி/84)

## ஒரு தொகுதி மருந்துகள் வந்தன

யாழ். சுகாதார திணைக்களத்துக்கான முதலாம் கந்தாயத்துக்கான மேலும் ஒரு தொகுதி மருந்துகள் கடந்த வியாழக்கிழமை செஞ்சிலுவைக் கப்பல் மூலம் எடுத்து வரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது:

இம்மருந்துகளில்பெருமளவு சேலைன் உட்பட மேலும் பல முக்கியமான மருந்துப் பொருட்கள் வந்து சேர்ந்துள்ளதாக அறிவிக்கப்படுகிறது. [78]

### வன்னி சென்று...

பாகவும், வன்னி செல்லும் திகதி தொடர்பாகவும் முடிவெடுப்பதற்கு வன்னி செல்ல விருப்பவர்களின் பெயர் விபரம் மற்றும் அடையாள அட்டை விபரம் என்பன பாதுகாப்பு அமைச்சுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பப்பட்டு அது தொடர்பான முடிவெடுக்கப்படும் எனவும் செஞ்சிலுவைச்சங்கபிரதிநிதி தர்ஷா குணவர்த்தனா தெரிவித்துள்ளார் [வ-4)

### வன்னிக்குப்..-

அனுப்பிவைக்க முடியவில்லை என வவுனியா செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வாரத்தில் இரு தினங்கள் வன்னிக்கு பயணிகள் செல்வதற்கு அனுமதிக்கப்படுவது குறிப்பிடத்தக்கது.

இதே வேளை வன்னியிலிருந்து வவுனியா வரும் பயணிகள் எண்ணிக்கை குறைந்துவிட்டது.

நேற்று முன்தினம் 8 குடும்பங்களைச் சேர்ந்த 23 பேர் அகதிகளாக வந்திருப்பதாக தெரிவிக்கப்படுகிறது.

தற்போது வவுனியா புகையிரத நிலையத்தின் முன்பாக உள்ள சனச தற்காலிக அகதி முகாமில் 1200 அகதிகள் தங்கியிருக்கிறார்கள். ஆனால் இவர்களுக்கான வசதிகள் போதாது எனக் குறை கூறப்படுகின்றது. (வ-103)


ஸ்ரீ செல்வா
யாழ்ப்பாணம்

பிரபுதேவா, ரோஜா
நடித்த
ஏழையின் சிரிப்பில்
(புதிய வெளியீடு)
10. 30, 2. 30 (ப.நே)

வெட்டுப்படாத
முழுமையான நேரடி
CD யில் காண்பிக்கப்படும்
மகளிருக்கு இடமுண்டு
(00115)


## ஷெல் வீச்சில் காயமடைந்தார்

பளை,புலோப்பளை பகுதிகளில் இடம்பெற்ற ஷெல் வீச்சில் ஒருவர் காயமடைந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

புலோப்பளையைச் சேர்ந்த அ.இராசப்பு(வயது 38) என்பவரே படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டவராவார் (வ-78)

### யாழ். விவசாயப். . .

றத்தில் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வியாழக்கிழமை பாராளுமன்றத்தில் வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டு சட்டவிவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய அமைச்சர் இலங்கை இந்திய சுதந்திர வர்த்தக ஒப்பந்தம் மூலம் வர்த்தகமும் முதலீடுகளும் வந்துகுவியும் என்றும் எமது தொழிலதிபர்கள் அதிகளவு சந்தை வாய்ப்பைப் பெற்றுக்கொள்ள இவ் ஒப்பந்தம் வாய்ப்பளிக்கும் என்றும் மேலும் தெரிவித்தார். [ந-4]

### உள்ளூர். . .

பகல் சிங்கள பூமிபுத்திர கட்சியின் தலைவர் பேராசிரியர் ஹரிச்சந்திர விஜயதுங்க தலைமையில் சென்ற தூதுக் குழுவினரால் நோர்வே தூதுவரிடம் பி.ப.2.00 மணியளவில் சமர்ப்பிக்கப்பட்டது.

இம் மகஜர் ஊர்வலமாகச் சென்று சமர்ப்பிக்கப்பட இருந்ததையடுத்து பாதுகாப்பு ஏற்பாடுகள் கொழும்பு நகரில் பலப்படுத்தப்பட்டிருந்தது.

மகஜர் சமர்ப்பித்தகுழுவில் மேஜர் ஜெனரல் ஆனந்த வீரசேகரா இடம் பெற்றிருந்தார். சிங்கள இனவாதக் கட்சிகளினால் சமர்ப்பிக்கப்பட்ட இம் மகஜரில் இனப் பிரச்சினை தொடர்பான முக்கிய பல அம்சங்கள் இடம் பெற்றிருந்தன.

நோர்வே தூதுவராலயத்தில் மகஜர் வழங்கப்பட்டு ஒரு மணித்தியாலத்தின் பின் ஜனாதிபதி சந்திரிக்கா பண்டாரநாயக்க குமாரதுங்கவிடமும் இம் மகஜர் சமர்ப்பிக்கப்பட்டது.

### அமைச்சர். . .

யைத் துறக்கவேண்டும் அல்லது கட்சியிலிருந்து நீக்கப்படுவார்கள் எனத் தீர்மானிக்கப்பட்டது தெரிந்ததே.

இது தொடர்பாகவே அமைச்சர்களான நந்தா மத்யூ, சரத் அமுனுகம ஆகியோர் கருத்துத் தெரிவிக்கையில்: நாம் அமைச்சர் பதவிகளிலிருந்து விலகமாட்டோம். ஐ, தே. கட்சித்தலைவருக்கு நாம் எழுதிய கடிதத்திற்கு பதில்கிட்டவில்லை.

கடந்த பொதுத் தேர்தலில் ஐ. தே. கட்சி பட்டியலில் தெரிவு செய்யப்பட்டோமாயினும் எம்மைப்போல் தெரிவு செய்யப்பட்ட இ. தொ, கா. எம். பிக்கள் அரசாங்கத்தில் அமைச்சர் பதவி வகிக்கின்றார்கள். அவர்களை பதவி விலகும்படிகோராமல் எம்மை மட்டும்பதவி விலகக் கேட்பது என்னநியாயம் என்றனர்.(4)

## இன்று

பருத்தித்துறை மேலைப் புலோலி தம்பசிட்டி அருள்மிகு பண்டாரி அம்மன் வருடாந்த மாசிமக தீர்த்த உற்சவம் இன்றுகாலை 6-30 மணியளவில் விசேட பூஜை இடம் பெறும்.

### எழுதுமட்டுவாளில். . .

பட்டதுடன் ஆறு படையினர் படுகாயமடைந்த நிலையில் கொழும்பு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்

கொல்லப்பட்டஉதவி விமான ஓட்டி சிவலி முனசிங்க முன்னாள் இராணுவப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் சரத் முனசிங்காவின் பேரன் என்பதும் குறிப்பிடத்தக்கது.

### உமையாள்புரத்தில்..

முள்ளியவளை

2 ஆம் லெப்டினன்ட்களான

★ சீலன்
(காந்தரூபன் உதயகுமார்) புதுக்குடியிருப்பு

★ மலைஅரசி
(வேல்நம்பி சுகந்தினி) மாங்குளம்

வீரவேங்கைகளான

★ பொட்டு
(ஜோன்பீற்றர் விமலதாஸ்) மட்டக்களப்பு

★ ஸ்ரீதரன்
(ஞானசோதி அமலதாஸ்) யாழ்.மாவட்டம்

★ சுபேரன்
(மகேந்திரராஜா தனேஸ்வரன்) புதுக்குடியிருப்பு

★ உதயன்
(தம்பிராசா வசந்தகுமார்) அம்பாறை

★ புலிக்குட்டி
[எட்வேட் அலோசியஸ்] யாழ்.மாவட்டம்

★ தமிழ்மாறன்
(ராஜமோகன் ராஜன்) கிளிநொச்சி

★ நிலுவன்
(பரமு சதீஸ்குமார்) முள்ளியவளை

★ செல்வமாறன்
(தங்கவேல் சோமசுந்தரம்) கிளிநொச்சி

★ சிவதாசன்
[தம்பிராஜ் செல்வசுதன்] யாழ். மாவட்டம்

★ குமரன்
(மார்க்கண்டு தனேஸ்குமார்) யாழ், மாவட்டம்

★ மணிமொழியன்
(தனபாலசிங்கம் பகீரதன்) யாழ். மாவட்டம்

★ ஈழவேங்கை
(பாலசுப்பிரமணியம் ஹரிகரன்) யாழ். மாவட்டம்

★ நித்திஅரசன்
(அரும் தவநாதன் தயாநந்தன்] மாங்குளம்

★ கலை அழகன்
(லட்சுமணன் யோகேஸ்ரவன்) யாழ். மாவட்டம்

[வ - 6]

## பிறந்த நாள் வாழ்த்து

### செல்வி கீர்த்தனா

யோகேஸ்வரன் பாமா தம்பதிகளின் செல்வப் புதல்வி கீர்த்தனா தனது பிறந்த நாளை இன்று19.2.2000-ல் ஜேர்மனியில் உள்ள தனது இல்லத்தில் வெகு விமரிசையாகக் கொண்டாடுகின்றார். இவரை நீர்வேலியைச் சேர்ந்த சுதாகரன் மாமா, அத்தை அருந்தவநாயகி, அப்பப்பா கதிரவேலு, அப்பம்மா அன்னலச்சுமி, கைதடியைச் சேர்ந்த அப்பப்பா கனகரத்தினம், அப்பம்மா தங்கம், அன்ரிமாரான நித்தியா பாசமலர், சின்னமாமா இராமகிருஸ்ணன், ஆசைமாமா பவளராஜ்,இளையமாமனாரான இராதாகிருஸ்ணன், ஜேர்மனியில் இருக்கும் மாமனாரானபாலகிருஸ்ணன் குடும்பம், லண்டனில் இருக்கும் மாமனாரான சிறிகிருஸ்ணன் மற்றும் உற்றார், உறவினர் எல்லாம் வல்ல நீர்வேலிக் கந்தன், ஞானவைரவர் திருவருளால் சகல சௌபாக்கியங்களும் ஐஸ்வரியங்களும் பெற்று நீடூழி காலம் சிறப்புடன் வாழவாழ்த்துகின்றார்கள்.

தகவல்
இ.சுதாகரன்
யாழ்.பிரதம தபால்கந்தோர்
யாழ்ப்பாணம்

(0177)

இப்பத்திரிகை ''வலம்புரி'' அன் கோ ஸ்தாபனத்தாரினால் இல. 15, வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் எனும் விலாசத்தில் அமைந்துள்ள அவர்களது அச்சகத்தில் 2000 ஆண்டு பெப்ரவரி மாதம் 19 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.